மாலை பதிப்பு

# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

SUPEEDSAM EVERYTHING FOR PEOPLE

செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள supeedsam.com

25.08.2022 வியாழக்கிழமை supeedsam.com supeedsam@gmail.com

## இலங்கையுடன் நெருக்கமான உறவுகளை வளர்த்துக் கொள்ள அர்ப்பணிப்பேன்



### தென்னாபிரிக்க ஜனாதிபதி தெரிவிப்பு

இலங்கையுடன் தற்போதுள்ள நெருக்கமான உறவுகளை மேலும் மேம்படுத்த அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக தென்னாபிரிக்க ஜனாதிபதி மதமெலா சிறில் ரமபோசா ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களுக்கு அனுப்பிவைத்துள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். ஜனாதிபதியாக பதவியேற்றுள்ள ரணில் விக்கிரமசிங்க அவர்களுக்கு தனது மனப்பூர்வமான வாழ்த்துகளைத் தெரிவித்துள்ள தென்னாபிரிக்க ஜனாதிபதி, இரு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவை மேலும் வலுப்படுத்துவதே தமது எதிர்பார்ப்பு எனவும் தெரிவித்துள்ளார். தென்னாபிரிக்கா கடந்த காலங்களில் இலங்கையுடனான உறவு தொடர்பில் விசேட கவனம் செலுத்தியதாகவும் இரு நாடுகளுக்குமிடையிலான ஒத்துழைப்பையும் நட்புறவையும் பரஸ்பர புரிந்துணர்வையும் வலுப்படுத்துவதில் தொடர்ந்தும் விசேட கவனம் செலுத்தும் எனவும் அந்த வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நாட்டில் 60 இலட்சம் பேர் முதலாவது பூஸ்டர் தடுப்பூசியை பெறவில்லை

கொரோனாவுக்கு எதிரான முதலாவது பூஸ்டர் தடுப்பூசியை பெறாத சுமார் 60பேர் இன்னும் நாட்டில் இருப்பதாக தொற்றுநோயியல் பிரிவின் தலைவர் வைத்தியர் சமித்த கினிகே தெரிவித்தார். அரசாங்க தகவல் திணைக்களத்தில் இன்று (25) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட அவர், தற்போதைய கொரோனா தொற்று அபாயத்தை கருத்திற்கொண்டு பெற வேண்டிய தடுப்பூசிகளை உடனடியாக எடுத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார். இதேவேளை, இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட சமூகநல வைத்தியர் நிமல்கா பன்னிலஹெட்டி , கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், இந்த வருடத்தின் முதல் எட்டுமாதங்களில் டெங்கு நோயின் தாக்கம் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளதாக தெரிவித்தார்.

## 3 வாரங்களில் 30,000 சுற்றுலாப்பயணிகள் வருகை



இந்த மாதத்தின் முதல் 3 வாரங்களில் மாத்திரம் சுமார் 30,000இற்கும் அதிகமான சுற்றுலாப்பயணிகள் நாட்டை வந்தடைந்துள்ளனர். கடந்த முதலாம் திகதி முதல் நேற்று முன்தினம் வரையான காலப்பகுதியில், 31,105 சுற்றுலாப் பயணிகள் நாட்டை வந்தடைந்துள்ளதாக சுற்றுலா மேம்பாட்டு பணியகம் தெரிவித்துள்ளது. இந்த வருடத்தின் கடந்த ஜனவரி மாதம் முதல் திகதி முதல் இதுவரையில் 4 இலட்சத்து 89,775 சுற்றுலாப்பயணிகள் நாட்டை வந்தடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உலக சுகாதார அமைப்பு இலங்கைக்கு நிதி உதவி

World Health Organization

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு உலக சுகாதார அமைப்பின் பணிப்பாளர் நாயகம் டெட்ரோஸ் ஆதனோம் தனது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார். மேலும், இலங்கைக்கான மருந்துவத் தேவைகளை பூர்த்தி செய்துக் கொள்வதற்காக 04 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வழங்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

## இலங்கைக்கான பயண ஆலோசனையை இலகுபடுத்திய சுவிஸ்

அவசரகால சட்டம் நீடிக்கப்பட மாட்டாது என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அறிவித்ததை தொடர்ந்து சுவிஸ் அரசாங்கம் விதித்திருந்த பயண ஆலோசனைகளை இலகுபடுத்தியுள்ளது. சுவிஸ் அரசாங்கத்தின் இந்தத் தீர்மானத்தை இலங்கை உள்நாட்டு சுற்றுலா செயற்பாட்டாளர் சங்கம் பாராட்டியுள்ளது. சுவிட்சர்லாந்து எமக்கு ஒரு முக்கியமான சந்தையாகும். குறிப்பாக குளிர்காலத்தில் சுவிஸ்டர்லாந்து சுற்றுலாப் பயணிகளுக்கு இலங்கையை சிறந்த பயண இடமாக பார்ப்பதாக இலங்கை உள்நாட்டு சுற்றுலா சங்கத்தின் தலைவர் நிஷாத் விஜேதுங்க தெரிவித்தார். இதன் மூலம் சுவிட்ஸர்லாந்து சுற்றுலாப் பயணிகள் மூலம் இலங்கையின் சுற்றுலாத் துறை மேம்படும் என்றும் விஜேதுங்க சுட்டிக்காட்டினார். சுவிட்ஸர்லாந்து அரசாங்கம், இலங்கையின் அண்மைக்கால முன்னேற்றங்களைக் கருத்திற்கொண்டு, இலங்கையின் அரசியல் மற்றும் சமூக நிலைமைகள் குறித்து விழிப்புடன் இருக்குமாறு தனது குடிமக்களுக்கு பரிந்துரை செய்திருந்தது. அத்துடன், இலங்கை விவகாரத்தில் சமூக வலைத்தளங்கள் உட்பட அரசியல் கலந்துரையாடல்களைத் தவிர்க்குமாறும், உள்ளூராட்சி மன்றங்களின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுமாறும் தமது குடிமக்களுக்கு சுவிட்ஸர்லாந்து அரசாங்கம் அறிவுறுத்தியிருந்தது. இலங்கைக்கான பயணத்திற்கு 02

## நாளை பேருந்து சேவை குறையும்

நாளை (26) முதல் தனியார் பஸ் சேவைகள் 50 வீதம் குறைவடையும் என தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. இன்று (25) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட அதன் தலைவர் கெமுனு விஜேரத்ன இதனைத் தெரிவித்தார். கடந்த மூன்று நாட்களாக இ.போ.சபை டிப்போக்களில் இருந்து முறையாக டீசல் வரவில்லை என்றும், இன்று பஸ்கள் முழுமையாக இயங்கவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.இன்றும் தென் மாகாணத்தில் பல பஸ்கள் இயங்க முடியாத நிலையில் இருப்பதாகவும், அரசாங்கத்திடம் இருந்து விரைவான பதிலை எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறினார்.

### உரிமம் இல்லாத மற்றும் வழிகாட்டுதல்களுக்கு இணங்காத வணிகங்களுக்கு இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்

## எரிபொருளை விநியோகிக்காது

2100 க்கு அதிகமான வணிகங்கள் தங்களுக்கென சொந்த எரிபொருள் சேமிப்பு தொட்டிகளை அமைத்துள்ளதாகவும் மற்றும் பலவற்றை அனுமதியின்றியும் அமைத்திருப்பது தெரியவந்துள்ளதாகவும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார். ட்விட்டர் பதிவு ஒன்றை மேற்கொண்டு அவர் இதனை தெரிவித்துள்ளார். உரிமம் இல்லாத மற்றும் வழிகாட்டுதல்களுக்கு இணங்காத வணிகங்களுக்கு இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் எரிபொருளை விநியோகிக்காது என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.
அதேபோல், 1250க்கும் அதிகமான எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருள் விநியோகத்தில் முன்னுரிமை அளிக்கப்படும் என தெரிவித்த அமைச்சர், அத்தியாவசிய நுகர்வோருக்கு இலங்கை 02

## 91 மருந்து பொருட்களின் கையிருப்பு முற்றாக தீர்ந்துபோகும் அபாயம்

நாட்டில் 91 மிகவும் அவசியமான மருந்துபொருட்களின் கையிருப்பு முற்றாக தீர்ந்துபோகும் ஆபத்து உருவாகியுள்ளதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. நாட்டின் மத்திய மருத்துவ களஞ்சியத்தில் கடந்த வாரம் இந்த நிலை காணப்பட்டதாக அரசாங்க மருத்து அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. அரசமருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஹரித அலுத்கே இதனை தெரிவித்துள்ளார். அரசமருத்துவ அதிகாரிகள் சங்கத்தினால் நியமிக்கப்பட்ட மூவர் கொண்ட குழுவின் அறிக்கை மூலம் இது தெரியவந்துள்ளது. மயக்கமருந்து புற்றுநோய் நோய் மருந்துகள் சுவாசப்பாதிப்புகள் நோய்களிற்கு பயன்படுத்தப்படும் மருந்துகள் பொதுவான இருதயநோய்களிற்கான மருந்துகள் வலிநிவாரணிகள் முற்றாக தீர்ந்துபோகும் நிலை உருவாகும்வரை பொறுப்பான அதிகாரிகள் எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லைஎன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக ஹரித அலுத்கே தெரிவித்துள்ளார். மீதமுள்ள மருந்துகளின் கையிருப்பு போதுமானதாகயில்லை இதன் காரணமாக ஒருமாதத்திற்கு போதுமான மருந்துகளை மருத்துவர்களால் வழங்க முடியவில்லை ஒருவாரத்திற்கான மருந்துகளையே வழங்குகின்றனர் இதனால் நோயாளிகள் மீண்டும் மருத்துவர்களை நாடவேண்டியுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## அதிக விலைக்கு முட்டை விற்பனை செய்தவர்களுக்கெதிராக வழக்கு

அதிக விலைக்கு முட்டை விற்பனை செய்த 64 வர்த்தகர்கள் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதிக விலைக்கு முட்டைகளை விற்பனை செய்பவர்களை சுற்றிவளைக்கும் நடவடிக்கை தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருவதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது. கடந்த 19ஆம் திகதி நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில், முட்டைக்கு அதிகபட்ச சில்லறை விலையை நிர்ணயித்து அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி வெள்ளை முட்டையொன்றின் அதிகபட்ச சில்லறை விலை 43 ரூபாவாகவும் சிவப்பு அல்லது கபில நிற முட்டையொன்றின் அதிகபட்ச சில்லறை விலை 02

அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே!

## அதிக விலைக்கு முட்டை விற்பனை

45 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக குறித்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், தற்போதைய சூழ்நிலையில் அதிகபட்ச சில்லறை விலை நிர்ணயிக்கப்படுவது நடைமுறைக்கு சாத்தியமற்றது என சிறிய மற்றும் நடுத்தர அளவிலான முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

## இலங்கைக்கான பயண ஆலோசனையை இலகுபடுத்திய சுவிஸ்

முன்னரும், பயணத்தின் இடைநடுவிலும் சமகால சூழ்நிலை, ஊரடங்குச் சட்டங்கள் குறித்து ஊடகங்கள், சுற்றுலா வழிகாட்டிகள் மூலம் ஆராயுமாறும் சுவிட்ஸர்லாந்து அரசாங்கம் தனது குடிமக்களை கேட்டுக்கொண்டுள்ளது.

## எரிபொருளை விநியோகிக்காது

பெற்றோலிய கூட்டுத்தாபனம் எரிபொருளை தொடர்ச்சியாக விநியோகிக்கும் என குறிப்பிட்டுள்ளார். மேலும், ஏற்றுமதி வணிகங்கள் எரிபொருளுகான கொடுப்பனவுகளை அமெரிக்க டொலரில் செலுத்த வேண்டும் என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். எவ்வாறாயினும், வணிக நிறுவனங்களுக்கு பெற்றோல் வழங்கப்படாது என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

# மீட்கப்பட்ட மனித எச்சங்கள் மன்னார் நீதவான் முன்னிலையிலேயே பிரித்தெடுக்கப்பட்டு பரிசோதனைக்கு அனுப்பப்படும்

**( வாஸ் கூஞ்ஞ)**

மன்னார் திருக்கேதீஸ்வரம் மனித புதைகுழியிலிருந்து மீட்கப்பட்ட மனித எச்சங்களை மன்னாா் நீதவான் முன்னிலையிலேயே பிரித்தெடுக்கப்பட்டு சம்பந்தப்பட்ட காபன் பரிசோதனை நிறுவனத்துக்கு பரிசோதனைக்கு அனுப்பவதற்கான மாதிரிகளை தெரிந்தெடுத்து அனுப்புவதற்கு கட்டளையாக்கப்பட்டுள்ளது. மன்னார் திருக்கேதீஸ்வரம் மனித புதைகுழி வழக்கு புதன்கிழமை (24.08.2022) மன்னார் நீதவான் நீதிமன்றில் விசாரனைக்காக எடுக்கப்பட்டது. ஏற்கனவே மன்னார் திருக்கேதீஸ்வரம் மனித புதைகுழியிலிருந்து எடுக்கப்பட்ட மனித எச்சங்கள் பல காலங்களாக அனுராதபுரம் வைத்தியசாலையில் பாதுகாப்புக்காக வைக்கப்பட்டுள்ள நிலையில் மன்னார் நீதவான் நீதிமன்ற நீதிபதியின் கட்டளைக்கு அமைவாக அமெரிக்காவிலுள்ள் புரோகாட் என்னும் ஒரு நிறுவனத்தில் பரிசோதனைக்காக அனுப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என வழக்கு தொடுனர் சார்பாக கேட்கப்பட்டிருந்தது.

இதன் நிமித்தம் அநுராதபுரத்தில் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள இவ் மனித எச்சத்தை பிரித்தெடுத்து பகுப்பாய்வுக்கு அனுப்புவதற்காக கடந்த தவணையின்போது வழக்கு தொடுனர் மன்றில் கோரிக்கை ஒன்றை வைத்திருந்தனர். அத்துடன் அநுராதபுரம் நீதவான் நீதிமன்ற நீதிபதிக்கு முன்பாக மன்னார் நீதவான் நீதிமன்ற நீதிபதி அதற்கு உறுதுணைபுரிந்து அதற்கான எற்பாடுகளை மேற்கொள்ளும்படி கட்டளை ஒன்று வழங்குமாறும் மன்றில் வேண்டப்பட்டு இருந்தது. இதற்கமைய மன்றில் கட்டளை ஒன்று புதனிகிழமை (24.08.2022) மன்றில் வாசிக்கப்பட்டது. அதாவது ஏற்கனவே கொண்டு செல்லப்பட்ட மனித எச்சங்களை மன்னார் நீதவான் நீதிமன்றுக்கு ஆஜர்படுத்தி மன்னார் நீதவான் நீதிமன்ற நீதிபதி முன்னிலையிலேயே பிரித்தெடுக்கப்பட வேண்டும் எனவும் கட்டளையிடப்பட்டுள்ளது இவ் வழக்கு புதன்கிழமை (24.08.2022) மன்றில் விசாரனைக்கு எடுக்கப்பட்டபோது இவ் வழக்கில் பாதிப்படைந்தவர்கள் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரனி வீ.எஸ். நிரஞ்சனும் மற்றும் திருமதி றனித்தா ஞானராஜ் காணாமல் போனோர் அலுவலகம் சார்பில் திருமதி பி.புராதினி அவர்களும் மன்றில் ஆஜராகி இருந்தனர். அத்துடன் எதிர் தரப்பில் அரச சட்டத்தரனி மற்றும் புலனாய்வு பிரிவினரும் மன்றில் முன்னிலையாகி இருந்தனர். இவ்வழக்கானது எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 21 ந் திகதி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

# மட்டக்களப்பில் மண்ணெண்னை விநியோக நடவடிக்கை ஆரம்பம்




**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து எரிபொருள் தட்டுப்பாடு நாடு பூராகவும் நிலவி வந்த நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்திலும் எரிபொருள் தட்டுப்பாடு நிலவியிருந்த போதும் தற்போது நடைமுறையில் இருந்துவரும் ஞசு முறைமையினை தொடர்ந்து எரிபொருள் தட்டுப்பாடு நிவர்த்திக்கப்பட்ட நிலையை காணமுடிந்தது. இருந்தபோதிலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்ணெண்னை தட்டுப்பாடு கடந்த இரண்டு மாதங்களாக காணப்பட்டுவந்த நிலையில் நேற்று முதல் ஆரையம்பதி பல நோக்கு கூட்டுறவுச்சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மண்ணெண்னை வழங்கப்பட்டுவருகின்றது. பிரதேச செயலகத்தினால் வழங்கப்பட்ட ஒரு குடும்ப அட்டைக்கு 1000 ரூபாவிற்கும், மீனவர் சங்கத்தின் சிபாரிசுடன் வரும் மீனவர்களுக்கு 20 லீற்றர் மண்ணெண்னையும் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. குறித்த எரிபொருள் நிலையத்திற்கு கிடைக்கப்பெற்றுள்ள 13200 லீற்றர் மண்ணெண்னையினை இரண்டாவது நாளாக இன்றும் மக்களுக்காக விநியோகிக்கப்பட்டு வருவதுடன், பூநொச்சிமுனை, பாலமுனை மற்றும் கிரான்குளம் போன்ற பகுதிகளைச் சேர்ந்த மீனவர்களுக்கு மண்ணெனன்னை வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

# தடைசெய்யப்பட்ட முஸ்லிம் அமைப்புக்களிலிருந்து ஆறு அமைப்புக்களை நீக்குவது தொடர்பில் நடவடிக்கை



**நூருல் /ஹுதா உமர்**

தடைசெய்யப்பட்ட முஸ்லிம் அமைப்புக்களிலிருந்து ஆறு அமைப்புக்களை நீக்குவது தொடர்பில் நடவடிக்கை எடுக்க ஜனாதிபதியின் பணிப்புரைக்கு இணங்க புதன்கிழமை (24) ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதியின் சிரேஷ்ட பாதுகாப்பு ஆலோசகரும், ஜனாதிபதி அலுவலக பிரதானி சாகல ரத்நாயக்கவின் தலைமையில் இடம்பெற்ற பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகளுடனான கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பதவியேற்ற முதல் வாரத்தில் தடைசெய்யப்பட்ட முஸ்லிம் அமைப்புக்களின் தடைகளை நீக்குவது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்களான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ், இசாக் ரஹ்மான் ஆகியோர் ஜனாதிபதிக்கு முன்வைத்த கோரிக்கைக்கு அமைய ஜனாதிபதி விடுத்திருந்த பணிப்புரைக்கு இணங்க புதன்கிழமை (24) ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற பாதுகாப்பு அதிகாரிகளின் உயர்மட்ட கலந்துரையாடலிலையே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய
வருடாந்த மகோற்சவம் - 2022



கல் நந்தி புல்லுண்டு
வெள்ளையரை துரத்தியடித்த
தான்தோன்றீஸ்வரர் மகிமை காண வாரீர்!
கொடியேற்றம் : 29.08.2022
தேரோட்டம் : 11.09.2022
விளம்பர அனுசரணையாளர் மு.அருட்செல்வம் (மகிழடித்தீவு)

# டீசல் பற்றாக்குறைவினால் திண்மக்கழிவகற்றல் சேவையில் மட்டுப்பாடு

(அஸ்லம் எஸ்.மௌலானா)

டீசல் பற்றாக்குறை நீடித்து வருவதன் காரணமாக, கல்முனை மாநகர சபையின் திண்மக்கழிவகற்றல் சேவையை மட்டுப்படுத்தப்பட்டளவிலேயே முன்னெடுக்க வேண்டியிருக்கிறது. இந்நிலைமையை புரிந்து கொண்டு, செயற்படுமாறு கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் பொது மக்களை கேட்டுக்கொண்டுள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் இன்று (25) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது


நாட்டில் கடந்த பல மாதங்களாக நிலவி வருகின்ற பாரிய எரிபொருள் நெருக்கடிக்கு தற்காலிக தீர்வுகள் காணப்பட்டு வருகின்ற போதிலும், அதன் ஊடாக பெற்றோல் தட்டுப்பாடு ஓரளவு நிவர்த்தி செய்யப்பட்டிருந்தாலும் டீசல் தட்டுப்பாடு என்பது நாடு முழுவதிலும் இன்னும் நீடித்தே வருகின்றது. இதற்கு மத்தியில் QR Code முறைமை அமுல்படுத்தப்பட்டு வருவதால், கல்முனை மாநகர சபையின் திண்மக்கழிவகற்றல் சேவையில் ஈடுபடுகின்ற வாகனங்களுக்கு போதியளவு டீசலை பெற்றுக்கொள்ள முடியாதிருக்கிறது. கல்முனை மாநகர சபையின் திண்மக்கழிவகற்றல் சேவையில் ஈடுபடுகின்ற 27 வாகனங்களுக்கும் வாராந்தம் சுமார் 2000 (இரண்டாயிரம்) லீட்டர் டீசல் தேவையாக இருக்கிறது. எனினும் QR Code முறைமையின் கீழ் இவ்வாகனங்களுக்கு 540 லீட்டர் மாத்திரமே டீசல் கிடைக்கிறது. இதன்படி வழமையான சேவையுடன் ஒப்பிடுகையில் தற்போது கிட்டத்தட்ட நான்கில் ஒரு பகுதியளவிலான சேவையையே முன்னெடுக்க முடியுமாக இருக்கிறது.

இந்த QR Code முறைமைக்கப்பால் போதியளவு டீசல் தருவதற்கு எமக்குரிய எரிபொருள் நிரப்பு நிலையம் முன்வருவதாக இல்லை. ஏனெனில் QR Code முறைமையை மீறி செயற்பட்ட அம்பாறை மாவட்டத்திலுள்ள சில எரிபொருள் நிரப்பு நிலையங்களின் அனுமதிப்பத்திரம் தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளமை சுட்டிக்காட்டப்படுகிறது. இப்பிரச்சினை குறித்து மாவட்ட அரசாங்க அதிபருடன் பல தடவைகள் பேசியும் சாதகமான தீர்வு கிடைக்கவில்லை. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவர் உள்ளிட்ட அதிகாரிகளின் கவனத்திற்கும் இதனைக் கொண்டு சென்றுள்ளோம். QR Code முறைமையில் இருந்து விலக்களிக்குமாறு கோரி தற்போது எரிசக்தி அமைச்சு மட்டத்திலும் பேசி வருகிறோம். இந்நிலையில், எரிபொருள் நெருக்கடிக்கு தீர்வு கிடைக்கும் வரை எமது திண்மக்கழிவகற்றல் சேவையை மட்டுப்படுத்தி முன்னெடுப்பதென்பது தவிர்க்க முடியாத விடயமாகும்.

இந்த அசாதாரண நிலைமையை பொது மக்கள் புரிந்து கொண்டு, ஒத்துழைப்பு வழங்க முன்வர வேண்டுமென கேட்டுக் கொள்கின்றேன். அதேவேளை, கடந்த கால கொரோனா பெருந்தொற்று அசாதாரண சூழ்நிலை மற்றும் தற்போதைய பொருளாதார நெருக்கடி போன்ற காரணங்களினால் மாநகர சபைக்கான வருமானம் பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளதால் ஏற்பட்டிருக்கின்ற நிதிப்பற்றாக்குறை ஒருபுறம், எரிபொருள் மற்றும் வாகன உதிரிப்பாகங்களின் கடுமையான விலை அதிகரிப்பு இன்னொரு புறம், இவற்றுக்கு மத்தியிலேயே பெருந்தொகை செலவுகளை மேற்கொண்டு, திண்மக்கழிவகற்றல் சேவையை முன்னெடுத்து வருகின்றோம் என்பதையும் இச்சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்– என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# தனியன் காட்டு யானை ஒன்றின் அட்டகாசம்





பாறுக் ஷிஹான்

கல்முனை மாநகரசபை பிரிவிற்குட்பட்ட நற்பிட்டிமுனை ,பாண்டிருப்பு, மருதமுனை, பகுதியில் உள்ள மக்கள் குடியிருப்புகளுள் ஊடுருவிய காட்டுயானைகள் வீடுகளுக்குள் புகுந்து சுற்றுமதில் மற்றும் பயனுள்ள வாழை மரங்களை துவம்சம் செய்துள்ளன.அண்மைக்காலமாக இப்பகுதிகளில் காட்டுயானைகள் அட்டகாசம் அதிகரித்து வருவதுடன் இங்குள்ள கரவாகுப்பற்று கல்முனைக் கண்டத்திலுற்குள் நுழையும் காட்டுயானைகள் கல்முனை மாநகர சபைக்குட்பட்ட கிராமங்களுக்குள் உட்புகுந்து தொடர்ந்தும் மக்களை அச்சுறுத்தி வருகின்றன. இப் பிரதேசத்தில் கடந்த ஒரு வாரகாலமாக என்றுமில்லாத வகையில் தனியன் காட்டுயானை ஒன்று அட்டகாசத்தில் ஈடுபட்டு வருகின்றது.

கடந்த திங்கட்கிழமை (22) அதிகாலை 2 மணியளவில் நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு, மக்கள் குடியிருப்பு நிறைந்துள்ள பகுதிக்குள் நுழைந்த குறித்த தனியன் காட்டுயானை ஒன்று அங்குள்ள வீட்டு மதில் மற்றும் வாழைஇ பலா உட்பட பயனுள்ள மரங்களையும் துவம்சம் செய்துள்ளது. மேலும் இவ்வாறு இரவு நேரத்தில் திடீரென வீட்டிற்குள் நுழைகின்ற தனியன் காட்டுயானையினால் பிரதேச மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

அத்துடன் ஊருக்குள் யானை நுழைந்ததை அறிந்து கொண்ட மக்கள் விழிப்படைந்ததுடன் அதனை விரட்டுவதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். சமீப காலமாக காட்டு யானைகள் சேனைக்குடியிருப்பு, நற்பிட்டிமுனை ,பாண்டிருப்பு ,மருதமுனை, கிராமத்திற்குள நுழைந்து அட்டகாசம் செய்து வருவதினால் இரவு வேளையில் மக்கள் நித்திரையின்றி விழித்திருக்கின்றனர் இதனால் பல்வேறு உடல் உள உபாதைகளுக்குள்ளாகியும் வருகின்றனர். எனவே காட்டு யானைகளை விரட்டுவதற்க்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# வடக்கு-கிழக்கு சமூகம் தொடர்பில் போதிய அறிவு ஹக்கீமுக்கு இல்லை



நூருல் /ஹுதா உமர்

வடக்கு– கிழக்கின் பூர்விகம், நிலபுல எல்லைகள், கலாச்சாரம், இன நல்லிணக்கம் பற்றி எதுவும் தெரியாது கிழக்கு மக்களையும் வடக்கு மக்களையும் சண்டைக்கு மூட்டிவிடும் விதமாக கருத்துக்களை வெளியிட்டு வரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவுப் ஹக்கீம் அவர்களுக்கு வட– கிழக்கு மக்களின் அபிலாசைகளை முழுமையாக தெளிவுபடுத்த வடக்கு கிழக்கிலுள்ள சமூக தலைவர்கள், புத்திஜீவிகள் முன்வர வேண்டும் என கிழக்கின் கேடயம் அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

கிழக்கின் கேடயம் அமைப்பின் பிராதன ஒருங்கிணைப்பாளரும், அக்கரைப்பற்று மாநகர சபை உறுப்பினருமான எஸ்.எம். சபீஸ் விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். தொடர்ந்தும் அந்த அறிக்கையில், ஒருகதையை திரும்ப திரும்ப சத்தம்போட்டு கூறினால் உண்மையாகிவிடும் என்பதை அறிந்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவுப் ஹக்கீம் அவர்கள் வடக்கு கிழக்கு தொடர்பில் தான் கொண்டுள்ள பிழையான எண்ணங்களை சமூகத்தின் அபிலாசைகளாக தொடர்ந்தும் பொதுவெளியில் முன்வைத்து வருகிறார். ஒரு சமூகத்தின் அதிக ஆதாரவாளர்களை கொண்ட தேசிய கட்சியொன்றின் தலைவராக இருக்கும் ரவூப் ஹக்கீம் அவர்கள் சமூக பொறுப்புக்களை கடந்து சமூகத்தை பலிகொடுக்கும் வேலைத்திட்டங்களிலும், கருத்தாடல்களிலும் முழுமையாக இறங்கியுள்ளார்.

தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கு முஸ்லிங்கள் குறுக்காக நிற்கமாட்டார்கள் எனும் அவரது வாதத்தின் மூலம் தமிழ்– முஸ்லிம் மக்கள் ஏற்கனவே கொண்டுள்ள உறவை சிதைத்து இனவாத அரசியலொன்றை செய்ய எத்தனிப்பதும், வடகிழக்கு இணைப்பை மறைமுகமாக கோருவதும் இலங்கையின் இறைமைக்கு ஆபத்தானது. இப்படிப்பட்ட சிந்தனைகளிலிருந்து ரவூப் ஹக்கீம் அவர்களை வெளியே கொண்டுவர சமூக தலைவர்கள், புத்திஜீவிகள் உடனடியாக முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.




# நிந்தவூர், ஒலுவில் மற்றும் பாலமுனை கடலரிப்பைத் தடுக்க Tetrapods கற்கள்



(பைஷல் இஸ்மாயில்)

நிந்தவூர், ஒலுவில் மற்றும் பாலமுனை பிரதேசங்களில் ஏற்பட்டிருக்கும் தீவிர கடலரிப்பைத் தடுப்பதற்கான முஷர்ரப் எம்பியின் ஆலோசனைக்கு ஜனாதிபதியின் செயலாளர் இணக்கம் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் நடந்த சந்திப்பின் போது,

நிந்தவூர் பாலமுனை மற்றும் ஒலுவில் போன்ற பிரதேசங்களில் ஏற்பட்டுள்ள கடலரிப்பின் தீவிரத்ன்மையை உடனடியாக கட்டுப்படுத்துமாறு – நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ் எம் எம் முஷர்ரபினால் , அம்பாறை மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் 2021 டிசம்பர் மாதம் ஏழாம் திகதி முன்மொழிவொன்று முன் வைக்கப்பட்டிருந்தது. குறித்த கூட்டத்தில் நிந்தவூர் கடலரிப்பினை தடுப்பதற்காக 56 மில்லியன் ரூபாவை அவசரமாக ஒதுக்குவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டதால் – கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூல வள முகாமைத்துவத் திணைக்களம் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபருக்கு 2022 – ஜனவரி 25ஆம் திகதி – இது குறித்து கடிதம் ஒன்றை எழுதி இருந்தது.

அத்துடன் குறித்த கடலரிப்பை தடுப்பதற்கான அபிவிருத்தி முன்மொழிவையும் கடிதத்துடன் அத்திணைக்களம் இணைத்திருந்தது. அதன்பின்னர் கடலரிப்பு – குறிப்பிட்ட பிரதேசங்களில் தீவிரத் தன்மை அடைந்ததை அடுத்து நிந்தவூர் ஜ/ம்ஆ பள்ளிவாசல் நிர்வாகத்தினர் 2022 ஆகஸ்ட் மாதம் 21ஆம் திகதி , முஷர்ரப் எம்பியின் கவனத்திற்கு கொண்டு வந்ததை அடுத்து அரச உயர் மட்டங்களுடனும் அரசாங்கத்தின் உரிய தரப்புக்களுடனும் பல கட்டக் கலந்துரையாடல்களை முஷர்ரப் எம்பி முன்னெடுத்திருந்தார். இந்த விடயங்களை – இன்று ஜனாதிபதியின் செயலாளரை சந்தித்த முஷர்ரப் எம்பி – விரிவாக விளக்கியதுடன் இரண்டு முன்மொழிவுகளையும் முன் வைத்தார். கொழும்பு துறைமுகத்தை அண்டிய துறைமுக நகரத்தை அமைப்பதற்கு தீர்மானித்ததால் குறித்த துறைமுக நகரத்தை அமைக்கும் பொழுது அதனால் துறைமுகத்துக்கு ஏற்படும் பாதிப்புகளை தடுப்பதற்காக – வுநவசயிழனள கற்கள் அங்கு கொண்டு வரப்பட்டது.

எதிர்பார்த்தது போல எவ்விதமான பாதிப்பும் கொழும்பு துறைமுகத்துக்கு ஏற்படாததால் தற்பொழுது அந்த கற்கள் அங்கு பிரயோசனமற்ற நிலையில் காணப்படுகிறது.

அவ்வாறு பிரயோசனமற்ற நிலையில் காணப்படும் கற்களை கப்பல் ஒன்றின் ஊடாக நிந்தவூர் , பாலமுனை மற்றும் ஒலுவில் பிரதேச கடற் பகுதிகளுக்கு கொண்டு செல்ல முடியும் என்று முஷர்ரப் எம்பி ஆலோசனை முன்வைத்தார். அம்பாறை மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தின் தீர்மானத்தின் படி குறித்த கடலரிப்பை தடுப்பதற்காக தீர்மானிக்கப்பட்ட தொகையினை கொண்டு குறித்த கற்களை கப்பலூடாக கொண்டு செல்ல முடியும் எனவும் அதே நேரம் நிரந்தர தீர்வினையும் குறித்த கடல்ரிப்புக்கு வழங்க முடியும் எனவும் தெரிவித்தார்.

இந்த ஆலோசனைகளை ஏற்றுக் கொண்ட ஜனாதிபதியின் செயலாளர் இந்த தீவிரமான கடலரிப்பை நிரந்தரமாக தடுப்பதற்கு துறைமுகநகரம்மற்றும்துறைமுகத்தை அண்டியுள்ள பகுதிகளில் காணப்படும் வுநவசயிழனள கற்களை கொண்டு சென்று இடுவதற்கு மிக அவசரமாக சாத்தியமான நடைமுறைகளை எடுப்பதற்கு முயற்சிக்குமாறு ஜனாதிபதியின் செயலாளர் உரிய தரப்புகளுக்கு அறிவுறுத்தினார்.

# மூதூர் சிறுவர் சபை சிறுவர்களினால் பிரதேச செயலாளரிடம் மகஜர் கையளிப்பு



எப்.முபாரக்

மூதூர் பிரதேச செயலக பிரிவு ரீதியாக சிறுவர்கள் எதிர்நோக்குகின்ற சிறுவர் சார்ந்த பிரச்சினைகளை மூதூர் பிரதேச செயலாளர் எம். பி. எம்.முபாரக் அவர்களிடம் மகஜராக பிரதேச சிறுவர் சபை சிறுவர்களினால் இன்று கையளிக்கப்பட்டது. இதில் சிறுவர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுடன் கிராம மட்ட சிறுவர் அபிவிருத்தி குழுக் கூட்டத்தினை வெற்றிகரமாக செயற்படுத்தி அவற்றுக்கான தீர்வுகளை பெற்றுத்தருமாறும் கோரப்பட்டுள்ளது. குறித்த நிகழ்வில் மூதூர் பிரதேச செயலக சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர், வேல்ட் விசன் நிறுவனத்தின் வெளிக்கள உத்தியோகத்தர்கள், பிரதேச சிறுவர் சபை சிறுவர்கள்,எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# கல்வியில் ஒட்டுணர்வு' என்னும் நிகழ்ச்சித் திட்டம்



(எம்.ஏ.றமீஸ்)

அட்டாளைச்சேனை தேசிய கல்வியியற் கல்லூரியில் ஏற்பாடு செய்யப்பட்ட 'கல்வியில் ஒட்டுணர்வு' என்னும் நிகழ்ச்சித் திட்டம் கடந்த இரண்டு தினங்களாக கல்லூரியின் பீடாதிபதி சட்டத்தரணி கே.புண்ணியமூர்த்தி தலைமையில் இடம்பெற்றது. யுனஸ்கோவின் அமைப்பின் அனுசரணையுடன் கல்வி அமைச்சின் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்ட இந்நிகழ்ச்சி திட்டம் விரிவுரையாளர்களான கே.பத்மராஜா, ஏ. நளீம் மற்றும் மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரியின் சிரேஸ்ட விரிவுரையாளர்களான எம். எல்.ஏ. வாஜீத், எஸ்.ஜெயராஜா ஆகியோரின் வழிகாட்டலில் இடம்பெற்றது. முதலாம் நாள் நிகழ்வின்போது ஆசிரிய பயிலுனர்களுக்கு முழுமையாக பயிற்சியளிக்கப்பட்டதோடு, இரண்டாம் நாள் நிகழ்வில், கல்வி அமைச்சின் சமாதானம், நல்லிணக்கம் மற்றும் பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கான பணிப்பாளர் எஸ்.முரளீதரன் பிரதம விருந்தினராகவும், மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி எம்.ஐ.எம். நவாஸ் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர். இதன்போது ஆசிரிய பயிலுநர்களின் ஒட்டுணர்வு தொடர்பான ஆக்கங்கள் கல்லூரிவளாகம் முழுவதும் காட்சிப்படுத்தப் பட்டிருந்ததோடு அதனை வெளிக்கொணரும் விதமான கலை நிகழ்சிகளும் அரங்கேற்றப்பட்டன. அத்துடன் நிகழ்வில் பங்கு பற்றிய ஆசிரிய பயிலுனர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை வங்கியின் மூன்றின் வெற்றியாளர்கள்



தலவாக்கலை பி.கேதீஸ்

இலங்கை வங்கியின் பிட்ட பிட்ட ரட்ட தேகி சீசன் மூன்றின் நுவரெலியா மாவட்டத்தில் அதிஸ்டசாலிகளாக தெரிவு செய்யப்பட்ட நான்கு பேருக்கு இலங்கை வங்கி கிளையின் பிரதேச முகாமையாளர் பி.விஸ்வநாதன் தங்க காசுகள் தலா இருவருக்கும் 100 000 ரூபாய் தலா இருவருக்கும் வழங்கி வைத்தார்.இந்நிகழ்வு தலவாக்கலை இலங்கை வங்கி கிளையில் நடைப்பெற்றது. இதன்போது இலங்கை வங்கி கிளையின் பிரதேச முகாமையாளர் பி.விஸ்வநாதன் ,தலவாக்கலை இலங்கை வங்கியின் முகாமையாளர் ஏ.எம்.கே.என். சுத்தநாயக்க , வியாபார மேம்பாட்டு திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் தலவாக்கலை கிளையின் உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துக்கொண்டனர்.

# போதைப்பொருள் தடுப்பு , பெண் வன்முறை விழிப்புணர்வு



ஹஸ்பர்

திருகோணமலை தம்பலகாமம் பிரதேசதாதுக்குட்பட்ட பகுதியில் போதைப்பொருள் தடுப்பு மற்றும் பெண்கள் வன்முறை தொடர்பான விழிப்புணர்வுக் பயிற்சி பட்டறை புதுக்குடியிருப்பு தெலுங்கு நகர் கிராம அபிவிருத்தி சங்க கட்டடத்தில் இன்று (25) நடைபெற்றது. பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி அவர்களின் வழிகாட்டுதளுக்கிணங்க இடம் பெற்ற குறித்த விழிப்புணர்வு நிகழ்வை இளைஞர் அகம் ஏற்பாடு செய்திருந்தது. போதைப் பொருள் பாவனை,பெண்களுக்கு ஏற்படும் வீட்டு வன்முறைகள் என பல விளக்கங்கள் இதன் போது இளைஞர் யுவதிகளுக்காக விழிப்புணர்வூட்டப்பட்டது. வளவாளராக பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.பாமினி மற்றும் அகம் நிறுவன உத்தியோகத்தர், சமுதாயம் சார் சீர்திருத்த உத்தியோகத்தர் ஹம்சபாலன் உள்ளிட்டோரால் நிகழ்வு இடம் பெற்றது. இதில் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் அனஸ், சமுதாய சீர் திருத்த அபிவிருத்தி உத்தியோகத்தர் ஹம்சன் இளைஞர் சேவை உத்தியோகத்தர் ஜாபீர், சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் ,தம்பலகாமம் பொலிஸ் அதிகாரி அகம் நிறுவன உத்தியோகத்தர்கள் இளைஞர் யுவதிகள் என பலர் கலந்து கொண்டனர்.




# இரண்டு வருடங்களின் பின் கிழக்கு மாகாண விளையாட்டு போட்டி

( காரைதீவு நிருபர் சகா)

கிழக்கு மாகாண கல்வி திணைக்களம் நடத்தும் கிழக்கு மாகாணமட்ட விளையாட்டு போட்டி இரண்டு வருடங்களின் பின் எதிர்வரும் செப்டம்பர் மாதம் மூன்றாம் தேதி ஆரம்பமாகின்றது. கடந்த இரண்டு வருடங்களாக கொரோனா தீநுண்மியின் தாக்கம் காரணமாக விளையாட்டுப் போட்டிகள் இடம் பெறவில்லை . இதனால் மாணவர்களின் உடற்திறன் வெளிப்படாமல் இருந்து வந்தது..

இன்று ஓரளவு சூழ்நிலை கனிந்து காணப்படுவதால் இந்த விளையாட்டு போட்டியை மாகாணத்தின் பல பாகங்களிலும் நடத்துவதற்கு கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டிருக்கின்றது . கிழக்கு மாகாண விளையாட்டுத்துறை உதவி கல்வி பணிப்பாளர் பி.ஐ.தர்மதிலக தலைமையிலான குழுவினர் வலயமட்ட விளையாட்டு துறை உதவி கல்விப் பணிப்பாளர்களுடன் கலந்துரையாடி இந்த விளையாட்டு போட்டியை நடத்துவதற்கு ஏற்பாடு செய்திருக்கின்றனர். இதன்படி எதிர்வரும் மூன்றாம் திகதி விளையாட்டு போட்டிகள் ஆரம்பமாகின்றன.

குழுநிலை விளையாட்டு போட்டிகள் மாகாணத்தின் பல பாகங்களிலும் நடைபெற இருக்கின்றன. மெய்வல்லுனர் விளையாட்டு போட்டிகள் அனைத்தும் கந்தளாய் லீலாரத்ன விளையாட்டரங்கில் நடைபெற இருக்கின்றது என்று சம்மாந்துறை வலய விளையாட்டு துறை உதவிக்கல்விப் பணிப்பாளர் ஏ.முஸ்ரக்அலி தெரிவித்தார். முதல் கட்டமாக நீச்சல் போட்டி அம்பாறை டி.எஸ்.சேனநாயக தேசிய கல்லூரியில் எதிர்வரும் 3 ஆம் 4 ஆம் திகதிகளில் நடைபெற இருக்கின்றது. தொடர்ந்து பூப்பந்து ,சதுரங்கம், கபடி ஆகிய போட்டிகள் 4 ஆம், 5 ஆம், 6 ஆம் திகதிகளில் நடைபெறும்.இப் போட்டிகள்

முறையே குருக்கள் மடம் கலைவாணி வித்யாலயத்திலும், கல்முனை சாகிறா தேசிய கல்லூரியிலும், நிந்தவூர் பொது விளையாட்டு மைதானத்திலும் நடைபெற இருக்கின்றன. நான்கு கட்டங்களாக இம் மாகாண மட்ட போட்டிகள் அனைத்தும் நடைபெறவிருக்கின்றன. முதல் கட்ட போட்டிகள் செப்டம்பர் மாதம் 3-6 ஆம் திகதி வரை நடைபெறும். இரண்டாம் கட்ட போட்டிகள் செப்டம்பர் 9 ஆம் திகதி முதல் நடைபெறும் என உதவி கல்வி பணிப்பாளர் ஏ.முஸ்ரக்அலி மேலும். தெரிவித்தார்.

# தோட்ட பிரச்சினைக்கு சுமூக தீர்வு



தலவாக்கலை பி.கேதீஸ்

கொட்டகலை ரொசிட்டா தோட்டத்தில் தொழிலாளர்களுக்கும், தோட்ட நிர்வாகத்திற்கும் இடையில் ஏற்பட்ட முறுகல் நிலைமை சமரச பேச்சுவார்த்தையின் மூலம் தீர்த்து வைக்கப்பட்டுள்ளது. அண்மைக்காலமாக குறித்த தோட்டத்தில் பல்வேறு கெடுபிடிகளை தோட்ட நிர்வாகம் தொழிலாளர்கள் மீது நடத்தி வந்துள்ளது. இதனையடுத்து, இப்பிரச்சினை இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொது செயலாளரும்,நுவரெலியாமாவட்டநாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமானின் தலையீட்டால்முடிவுக்குகொண்டுவரப்பட்டுள்ளது. தொழிலாளர்களின் பிரச்சினைகளை கேட்டறிந்த பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான், உடனடியாக கொட்டகலை ரொசிட்டா தோட்ட காரியாலயத்திற்கு நேற்று முன் தினம் (24) நேரடியாக சென்று தோட்ட முகாமையாளருடன், தொழிலாளர்களுக்கு தோட்ட நிர்வாகத்தால் நடத்தப்படும் கெடுபிடிகளை சுட்டிக்காட்டி கலந்துரையாடினார். அதன்பின்னர், இதனை ஏற்றுக்கொண்ட தோட்ட நிர்வாகம், ஒரு சுமூகமான நிலைமைக்கு வந்தது. இதனையடுத்து, பணிபகிஷ்கரிப்பில் ஈடுப்பட்ட தோட்ட தொழிலாளர்கள் வழமைக்கு திரும்பினர். இதன்போது இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும், நிதி செயலாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஸ்வரன், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தேசிய அமைப்பாளரும், மத்திய மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான ஏ.பி சக்திவேல், கொட்டகலை பிரதேச சபையின் உப தலைவர் பாலசுப்பிரமணியம், தொழிற்சங்க பிரதிநிதிகள் உட்பட பலர் உடன் இருந்தனர்.



அக்கரைப்பற்று தேசிய பாடசாலை மாணவர்களின் நலன் கருதி இப்பாடசாலையின் பழைய மாணவரும், ஓய்வு நிலை வலயக் கல்விப் பணிப்பாளருமான யூ.எல். எம். ஹாசீம் ஒரு தொகுதி நூல்களை இப்பாடசாலைக்கு அன்பளிப்புச் செய்தார். அதிபர் ஏ.பி. முஜீன் தலைமையில் நேற்று (25) பாடலையில் நடைபெற்ற நிகழ்வின்போது ஓய்வு நிலை வலயக் கல்விப் பணிப்பாளர் நூல்களை அதிபரிடம் கையளிப்பதையும் அருகில் சிரேஸ்ட ஆசிரியர்களான எம்.ஐ.ஏ.வஹாப், யூ.எல்.ஹாறூன் உள்ளிட்டோர் நிற்பதையும் காணலாம். **(படம் : எம்.ஏ.றமீஸ்)**

# மண்ணெண்ணெய் விலை அதிகரிப்பால் தொழிலாளர்கள் பாதிப்பு

தலவாக்கலை பி.கேதீஸ்

அரசாங்கத்தினால் மண்ணெண்ணெய் விலை அதிகரிக்கப்பட்டமையினால் தாம் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக மலையக தோட்டத்தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர். 87 ரூபாவாக இருந்த மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றின் விலை ஒரே நேரத்தில் 253 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் தாம் கவலையடைவதாக தோட்டத் தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர். தோட்டத் தொழிலாளர்கள் சமையலுக்கு மண்ணெண்ணெய் அடுப்புகளை அதிகம் பயன்படுத்துவதாகவும், இன்றும் பல தோட்ட வீடுகளில் குப்பி விளக்குகள் பயன்படுத்தப்படுவதாகவும், இந்த நாட்களில் மின்சாரம் இல்லாத நேரங்களில் குப்பி விளக்குகளை பயன்படுத்தி பிள்ளைகள் இரவு நேரங்களில் கல்வி கற்பதாகவும் குறிப்பிடுகின்றனர். அத்துடன், மரக்கறி தோட்டங்களுக்கு நீர் வழங்குவதற்காக தண்ணீர் மோட்டார் இயந்திரத்திற்கு மண்ணெண்ணெய்யை பயன்படுத்துவதாகவும், பாரியளவில் மண்ணெண்ணெய் விலை அதிகரிப்பு காரணமாக மரக்கறி உற்பத்தியை கைவிட்டு வருவதாகவும் மலையக தோட்ட தொழிலாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். மண்ணெண்ணெய் விலை பாரியளவில் அதிகரித்துள்ளமையினால் தாம் தற்போது பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர். கடும் பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்கும் தோட்டத் தொழிலாளர்களுக்கு மண்ணெண்ணெய்க்கான மானியத் திட்டத்தை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென தோட்டத் தொழிலாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# காரைதீவில் மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி



( காரைதீவு நிருபர் சகா)

காரைதீவு விவேகானந்தா விளையாட்டுக் கழகம் தனது 35 ம் ஆண்டு நிறைவை முன்னிட்டுசபாபதி-சோதியம்மா ஞாபகார்த்த நிதியத்தின் அனுசரணையில் நடாத்தும் மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியானது காரைதீவு விபுலானந்தா தேசிய பாடசாலை கனகரெட்ணம் விளையாட்டு மைதானத்தில் வெகு சிறப்பாக நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இச் சுற்றுப் போட்டியில் காரைதீவு,சம்மாந்துறை ,சொறிக்கல்முனை,ஆலையடிவேம்பு, வளத்தாப்பிட்டி ஊர்களைச் சேர்ந்த விளையாட்டுக் கழகங்கள் பங்கு பற்றுகின்றன. இறுதிப் போட்டியானது எதிர் வரும் 28.08.2022 அன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப 4.00 மணிக்கு வெகு விமர்சையாக நடைபெறவுள்ளது என கழக செயலாளர் கே.உமாரமணன்( தொழில்நுட்ப உத்தியோகத்தர்) தெரிவித்தார்.

# கால் புதையும் மண்ணில்

# சிற்கள் புதைந்து செல்லும்

# தேரோட்டம்

## 2022.09.11

## காண வாரீர்!

கொக்கட்டிச்சோலை
ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர்
ஆலயம்



"கல்விக்கு கைகொடுப்போம்"
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமுகத்தை
கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206

# எரிசக்தி பிரச்சினை சீன சூரியசக்தி நிறுவனத்துடன் அமைச்சர் ஹாபிஸ் நசீர் பேச்சு



**ந.குகதர்சன்**

நாடு எதிர்கொண்டுள்ள எரிசக்தி பிரச்சினை குறித்து , சீனாவின் சூரிய சக்தி உற்பத்தி நிறுவன அதிகாரிகளுடன், அமைச்சர் நஸீர் அஹமட் பேச்சுவார்த்தை நடாத்தினார். அமைச்சில் நடைபெற்ற இச்சந்திப்பில், மீளுருவாக்கத்தக்க எரிசக்தியை மேம்படுத்துவது குறித்து ஆராயப்பட்டது. மேலும், இவ்வேலைத் திட்டங்களை வலுவூட்டுவதற்கான வழிவகைகளையும் பெலிசிடி நிறுவன அதிகாரிகளுடன் அமைச்சர், கலந்துரையாடினார். இதனால், நாட்டிற்கு கிடைக்கவுள்ள நன்மைகள் பற்றி விரிவாக ஆராயப்பட்டதுடன், ஏற்பாடு செய்யப்படவுள்ள சர்வதேச எரிசக்தி மாநாட்டில் கலந்து கொள்ளுமாறும் சீன நிறுவன அதிகாரிகளுக்கு அமைச்சர் அழைப்பு விடுத்தார். இந்நிகழ்வில், அமைச்சரின் ஆலோசகர் திரு ஹெட்டியாராச்சி, இலங்கை தேசிய கண்காட்சி மற்றும் மாநாட்டு மைய பணிப்பாளர் முர்ஷிதீன், ஏற்பாட்டாளர் களுத்துறை நகர சபை உறுப்பினர் ஹிஷாம் சுஹைல், சியாஸ் சதுர்டீன் உட்பட முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

# கிண்ணியாவில் அறுவடை விழா



**கிண்ணியா நிருபர்**

கிண்ணியா வலய கல்வி அலுவலகத்திற்குட்பட்ட கிண்ணியா மத்திய கல்லூரியில் பயிரிடப்பட்ட மரக்கறி செய்கையின் அறுவடை நிகழ்வு இன்று (25) அதிபர் தலைமையில் மிக கோலாகலமாக கிண்ணியா மத்திய கல்லூரியில் நடைபெற்றது இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கிழக்கு மாகாண விவசாய பணிப்பாளர் னுச. எஸ்.எம்.குசைன், கிண்ணியா வலய கல்விப் பணிப்பாளர் ஏ.நசூகர்ஹான், கிண்ணியா வலய கல்வி உதவிப் பணியாளர் எம்.சீ.நஸார், கிண்ணியா பிரதேச செயலாளர் முகம்மது கனி, கிண்ணியா நகரசபை தவிசாளர் எம்.எம்.நிவாஸ், மற்றும் கிண்ணியா கோட்டக்கல்வி பணிப்பாளர் ஏ.எம். நாம்தீன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர் இதன் போது மாணவர்களினால் பயிரிடப்பட்ட கத்தரிக்காய் மற்றும் மிளகாய் போன்ற மரக்கறிகளை பிரதம விருந்தினர்களால் அறுவடை செய்தனர்.

# துறைசார் நிபுணர்களுடன் கடலரிப்பினை நிரந்தரமாக தடுப்பதற்காக கலந்துரையாடல்



**பாறுக் ஷிஹான்**

அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள கடலரிப்பினை தற்காலிகமாக தடுப்பதற்கான முயற்சிகள் இடம்பெற்று வருகின்ற போதிலும் நிரந்தர தீர்வினை நோக்கிய நகர்வின் ஓர் அங்கமாக நிந்தவூர் பிரதேச சபையின் தவிசாளர் எம்.ஏ.எம். அஸ்ரப் தாஹிர் ஒலுவில் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் துறைசார் நிபுணர்களுடன் புதன்கிழமை (24) கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொண்டிருந்தார்.

குறித்த பிரதேச கடலரிப்பானது கடந்த 2009 ஆம் ஆண்டில் இடம்பெற்ற ஒலுவில் துறைமுக அபிவிருத்தியின் பின்னரான காலப்பகுதியில் படிப்படியாக தென்னந்தோப்புகள், விவசாய காணிகள், மீன்பிடி வாடிகளென காவுகொண்டு இப்பொழுது குடியிருப்பு பகுதிகளை காவுகொள்ள எத்தனித்திருக்கின்றது. இதற்கான தற்காலிக தீர்வுகளை நிந்தவூர் பிரதேச சபை, கரையோர பாதுகாப்பு கரையோர வள முகாமைத்துவ திணைக்களம் மற்றும் ஊர் சார்ந்த அமைப்புகள் இனைந்து முன்னெடுத்து வருகின்றது. இத்தோடு நிறுத்தி விடாமல் இக்கடலரிப்பிற்கான நிரந்தர தீர்வுக்கு சாத்தியமான செயற்பாடுகள் மற்றும் முன்மொழுழிவுகளை வழங்குமாறு இத்துறையில் நிபுணத்துவமுள்ள சிரேஷ்ட பொறியிலாளர்களை உள்ளடக்கிய தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் பொறியியல் ஆலோசனை மையத்திடம் தவிசாளர் கேட்டுக் கொண்டார்.

இதன் போது கலந்து கொண்டிருந்த துறைசார் நிபுணர்கள் இக்கடலரிப்பினை தடுப்பதற்காக குறித்த பிரதேசத்தின் கடல் பரப்பில் நீரோட்ட அளவினை பருவகாலத்திற்கேற்ப கணிப்பீடு செய்தவன் மூலமே நிரந்தர தீர்வு நோக்கி நகர முடியுமெனவும், அதற்காக நிலையான ஆய்வினை தென்கிழக்கு பல்கலைக்கழகம், கடலோர பாதுகாப்பு கரையோர வள முகாமைத்துவ திணைக்களத்துடன் இனைந்து இதற்கான ஆய்வினை செய்து நிரந்தர தீர்வினை நோக்கிய திட்டத்தை தயாரிப்பதற்கான உடன்பாடுகள் எட்டப்பட்டது.

இவ்வாய்வினை மேற்கொள்வதற்கான முன்னெடுப்புகளை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கரின் பணிப்புரையில் பொறியியல் பீட நிபுணர்களால் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது நிந்தவூர் பிதேச சபையின் தவிசாளர் எம்.ஏ.எம். அஸ்ரப் தாஹிர், ஒலுவில் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர், நிந்தவூர் பிரதேச சபையின் கௌரவ உறுப்பினர் சட்டத்தரணி ஏ.எல். றியாஸ் ஆதம், தேசிய அருங்கலைகள் பேரவையின் கிழக்கு மாகாண உதவிப் பணிப்பாளரும் நிந்தவூர் பிரதேச சபையின் முன்னால் கௌரவ உறுப்பினருமான எஸ்.ஐ.எம். றியாஸ், கரையோர பாதுகாப்பு கரையோர வள முகாமைத்துவ திணைக்களத்தின் பிராந்திய பொறியியலாளர் திரு. துலசி தாசன், தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.ஐ. இல்ஹாம் ஜெசீல், சிரேஷ்ட பொறியியலாளர்களான றிசாத் ஆதம் லெப்பை, கே. விஜயகாந்தன், ஏ.சி. அஸ்லம் சுஜா ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

# நிந்தவூர் அல்-அஷ்றக் பாடசாலைக்கு 4 தங்கப்பதக்கங்கள்

**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

கார்மேல் பற்றிமா கல்லூரியில் நடைபெற்ற வலய மட்ட தமிழ் தினப் போட்டியில் நேற்று முன்தினம் வெளியான முடிவுகளின் படி பங்குபற்றிய நான்கு நிகழ்ச்சிகளிலும் நிந்தவூர் அல்–அஷ்றக் தேசிய பாடசாலை தங்கப்பதக்கங்களை வென்றுள்ளது.

பேச்சு •பிரிவு 5 , முஸ்லிம் நிகழ்ச்சி, தமிழ் அறிவு வினாவிடை, சிறுகதை ஆக்கம் என்ற 4 பிரிவுகளிலுமே மேற்படி தங்கப்பதக்கங்களை மாணவர்கள் வென்றுள்ளனர். இவ்வெற்றிக்கு முழு மூச்சாக முயற்சித்து வழிப்படுத்திய பகுதித்தலைவர் வை.எம்.அஷாப், நெறிப்படுத்திய உதவி அதிபர் எம். ஜவஹர் இப்றாஹிம், போட்டிகளுக்கு மாணவர்களை பயிற்றுவித்து அழைத்துச் சென்ற பாடப்பகுதித்தலைவர் ஏ. றிப்கா றசூல், பாட ஆசிரியர்கள் திருமதி எம்.எஸ்.சபானா, எம்.பி.ஏ. ஹாரூன், திருமதி ஏ. அன்வரா மற்றும் தமிழ் பாட ஆசிரியர்கள் அனைவருக்கும் பாடசாலையின் அதிபர் ஏ. அப்துல் கபூர் வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துள்ளார்.

# கண்மூடித்தனமாக இருந்தமைக்கு தவிசாளருக்கு கண்டனம்

**( வாஸ் கூஞ்ஞ)**

மன்னார் பிரதேச சபை தனது எல்லைகளுக்குட்பட்ட இடங்களில் நடைபெறும் இல்மன்னற் மணல் அகழ்வுக்கும் காற்றாலை அமைப்பதற்கும் எதிராக எந்தவித நடவடிக்கையும் எடுக்காத நிலையில் கண்மூடித்தனமாக இருந்து வருவது கண்டிக்கின்றோம் என மக்கள் மகஜர் மூலம் மன்னார் பிரதேச சபை தவிசாளரை கண்டித்துள்ளனர். பாரிய மணல் அகழ்வு மின்வலு காற்றாலைகள் அகியவற்றின் செயல்பாட்டுக்கு எதிரான கண்டன ஊர்வலமும் மகஜர் கையளிப்பும் புதன்கிழமை (24.08.2022) பேசாலையில் இடம்பெற்றது.

இதன்போது வழங்கப்பட்ட தவிசாளருக்கான கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்ததாவது, பாதிக்கப்பட்ட பூர்வீகிய கிராமங்களான தலைமன்னார் கிராமம் , தலைமன்னார் பியர் , தலைமன்னார் ஸ்ரேசன் , கட:டுக்காரன் குடியிருப்பு , பருத்திப்பண்ணை , கீழியன்குடியிருப்பு , நடுக்குடா . பாவிலுப்பட்டான் குடியிருப்பு , துள்ளுக்குடியிருப்பு . பேசாலை . முருகன் கோவில் . காட்டாஸ்பத்திரி மற்றும் சிறுத்தோப்பு இவை அனைத்தும் இணைந்து மொத்தத்தில் மன்னார் தீவை பிரதிபலித்து விடுக்கும் பாரிய மணல் அகழ்வு காற்றாலைகள் இவைகளால் பாரிய விளைவுகளுக்கு எதிரான போராட்டமும் மகஜர் கையளிப்பு ஆகும்.

இவ் மணல் அகழ்வானது 2015 ஆம் ஆண்டுஆரம்பிக்கப்பட்டது.இவ்நடவடிக்கையின் போது மன்னார் பிரதேச சபையினால் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மன்னார் பிரதேச சபையானது இந்த விடயத்தில் கண் மூடித்தனமாக இருந்து வருவது மனவருத்தத்துக்குரியது. தனி நபர் ஒருவர் ஜிஎஸ்எம்பி உதவியுடன் தனது வேலைத் திட்டத்தை ஆரம்பித்தது தெரிந்திருந்தும் பொறுப்பதிகாரி என்ற வகையிலேயே மக்களை பாதுகாக்க வேண்டிய அதிகாரிகளாக இருந்தும் நீங்கள் பாராமுகமாக இருந்துள்ளீர்கள்.

இதைதடுக்கவேண்டியமுழுப்பொறுப்பு பிரதேச சபையாகிய தங்களிடம் இருந்தபோதும் பிரதேச செயலாளருக்கு அறிவித்து இவற்றை தடுக்காததும் கண்மூடித்தனமாகவும் அசட்டையாகவும் இருந்துள்ளீர்கள். மன்னார் தீவுப்பகுதின் அதிகமான நிலப்பரப்புக்கள் பறிமுதல் செய்யப்படுகின்றன. எங்கள் மீன்பிடிகள் நாசமாக்கப்படுகின்றன. மாணவர்களின் கல்வி ஏலவே பாதிப்டைந்துள்ள நிலையில் தற்பொழுதும் பாதிப்புகளுக்கு உள்ளாகியுள்ளது.

இத்துடன் மக்கள் சுகாதார ரீதியிலும் பாதிப்புக்களை எதிர் நோக்குகின்றனர். கர்ப்பிணிமார்களின் பாதிப்பு உச்சநிலை அடைந்து வருகின்றது. இப்பொழுது வெள்ள அனர்த்தமும் தொற்று நோயும் பரவுகின்றன. பாரிய மணல் அகழ்வுக்கும் காற்றாலைகள் அமைப்பதற்கும் சிறு சிறு சலுகைகள் மற்றும் லஞ்சம் பெறுவதனால் இது திட்டங்களை மேற்கொள்பவர்களுக்கு சாதகமாக அமைகின்றது. எதாவது திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றபோது இவைகள் மக்களுக்கு நன்மையா தீமையா என்று அறிவு சார்ந்த அனுபவம் சார்ந்தவர்களுடன் கலந்தாலோசிப்பதுடன் இவைகள் மக்களுக்கு தெரியப்டுத்துவது ஒவ்வொரு பிரதேச சபை உறுப்பினர்களின் கடமையாகும். எதிர்வரும் காலங்களில் அழிவுக்குள்ளாகும் திட்டங்களை முன்டுெக்கப்படுகின்றபோது பிரதேச சபை தாங்களே எதிப்பு போராட்டங்களை முன்னெடுக்கப்பட வேண்டும்.

மக்களின் வாழ்வு சீரழிந்து போகுமாகில் அதற்கு பிரதேச சபையே முழுப் பொறுப்பை எடுக்க வேண்டும். மக்களை பாதிக்கும் திட்டங்களுக்கு பிரதேச சபை உடந்தையாக செல்லக்கூடாது. ஏன பேசாலையில் இடம்பெற்ற கண்டன பேரணியின்போது மன்னார் பிரதேச சபை தவிசாளருக்கான மகஜரில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருந்தது.




# கல்குடா - நுகர்வோர் அலுவலர்கள் அதிகார சபை அதிகாரிகள் விசேட சுற்றி வளைப்பு

**எஸ்.எம்.எம்.முர்ஷித்**

மட்டக்களப்பு மாவட்ட நுகர்வோர் அலுவலர்கள் அதிகார சபை அதிகாரிகள் இன்று மாவட்டத்தில் பல்வேறு பிரதேசங்களிலும் விசேட சுற்றி வளைப்பு மேற்கொண்டிருந்தனர். அந்த வகையில் அரசாங்கத்தினால் கடந்த சனிக்கிழமை வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் வெள்ளை முட்டை ரூபாய் 43 சிவப்பு முட்டை ரூபாய் 45 அரசாங்கத்தினால் உயர்ந்த பட்ச கட்டுப்பாட்டு விலையாக விதிக்கப்பட்டிருக்கின்ற சந்தர்ப்பத்தில் அரச கட்டுப்பாட்டு விலைக்கு அமைவாக மட்டக்களப்பு மாவட்டத்தில் முட்டைகள் விற்பனை செய்ய படவில்லை என மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படையில் மாவட்ட அரசாங்க அதிபர் கே கருணாகரன் கிடைத்த முறைபாட்டின் அடிப்படையில் அவரின் வழிகாட்டலின் கீழ் 24. 08.2022 நேற்றைய தினம் மட்டக்களப்பு நகரம் மட்டக்களப்பு சந்தை மற்றும் ஏறாவூர் பிரதேசம் ஏறாவூர் சந்தை விசாரணை சுற்று வலைப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இந்த வகையில் அரச கட்டுப்பாட்டு விலையிடை விட அதிக விலைக்கு முட்டை விற்பனை செய்த வியாபாரிகள் எதிராக வழக்கு பதிவு செய்யப்பட்டது மேலும் பல வியாபாரிகளுக்கு அறிவுரைகளும் எச்சரிக்கைகளும் வழங்கப்பட்டிருந்தது இருப்பினும் மாவட்டத்தில் அரச கட்டுப்பாட்டு விலையை விட அதிக விலைக்கு முட்டை விற்பனை செய்கின்ற வியாபாரிகள் தொடர்பாக மட்டக்களப்பாப்பு மாவட்டம் பூராவும் சுற்றுவழிப்புகள் மேற்கொள்ளப்பட இருப்பதினால் முட்டை வியாபாரம் செய்கின்ற வியாபாரிகள் அரச கட்டுப்பாட்டு விலையை விட அதிக விலைக்கு விற்பனை செய்வதாக இருந்தால் அவர்களுக்கு எதிராக நீதிமன்றத்தின் ஊடாக குறைந்தது ஒரு லட்சம் தொடக்கம் 5 லட்சம் ரூபா வரை தண்ட பணம் விதிக்க முடியும் என்றும் ஆறு மாத கால சிறைத்தண்டனை விதிக்கப்பட முடியும் என்றும் நுகர்வோர் அலுவலக சம்பந்தமான அதிகார சபை மாவட்ட உதவி படிப்பாளர் ஆர் எப் ஏ அன்வர் சதாத் தெரிவித்தார். மேலும் அவர் தெரிவிக்கையில் மட்டக்களப்பு மாவட்ட பூராகவும் சுற்றி வளைப்புகள் மேற்கொள்ளப்பட உள்ளதால் முட்டை வியாபாரம் செய்கின்ற வியாபாரிகள் அரச கட்டுப்பாட்டு விலைக்கு அமைவாக விற்பனை செய்ய வேண்டும் என்றும் தவறும் பட்சத்தில் அவர்களுக்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்வதாகவும் தெரிவித்தார்.